# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடமாகாணம்
## பயிற்சிப் பரீட்சை - மார்ச் 2017

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - II

**3**

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் ........................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 61 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | ஒப்பம் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதெனச் சான்றுப் படுத்துகின்றேன். | V/II/T/ |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரிசீலனையின் மதிப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன். | V/II/T/ |
| கணித பரீட்சகர்<br>மதிப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன் | V/II/T/EMF/ |
| பிரதம பரீட்சகர்<br>மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன் | V/II/T/CH/ |

✧ **பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு பந்தியிலிருந்து விடையெழுதுக.**

**01)** புல்வெளிக்கு அப்பால் ஓர் அடர்ந்த காடு இருந்தது. காட்டின் மத்தியில் அழகான ஏரி. ஏரிக் கரையில் இருந்த புதர்களில் ஒரு வாத்து முட்டைகளை இட்டு அடைகாத்துக் கொண்டிருந்தது. மற்றைய வாத்துக்கள் வாய்க்காலில் சுகமாக நீந்திக் கொண்டிருந்தன. அந்த வாத்திற்கு மற்றைய வாத்துக்களுடன் அரட்டை அடிக்க விருப்பமில்லை.

i. வாத்து முட்டைகளை எங்கே இட்டது?

..............................................................................................................................

ii. பெயரடை மொழி ஒன்றை எழுதுக.

..............................................................................................................................

iii. குளம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

..............................................................................................................................

iv. நாடு என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

..............................................................................................................................

v. ஏரி + கரை எனும் சொல்லைச் சேர்த்து எழுதுக.

..............................................................................................................................

vi. அ∴றிணை ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.

..............................................................................................................................

(6 x 1 = *06* புள்ளிகள்)

**02)** **ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

i. ஆற்றுநீர் சலசலவென்று ஓடியது. இதில் **சலசல** என்பது
(இணைமொழி / இரட்டைக்கிளவி / அடுக்குமொழி)

ii. இருபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா
(பொன்விழா / வைரவிழா / வெள்ளிவிழா)

iii. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும். இப் பழமொழியின் கருத்து
(வீண்பெருமை / உலோபங் கூடாது / ஊதாரித்தனம்)

(3 x 1 = *03* புள்ளிகள்)

**03)** **பின்வருவனவற்றுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.**

i. ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் :..............................................................

ii. தனக்கென வாழாது பிறருக்காக வாழ்பவர் :..............................................................

(2 x 1 = *02* புள்ளிகள்)

**04)** **பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

i. கவிதா சந்தையில் மாம்பழம் வாழைப்பழம் தோடம்பழம் ஆகியன வாங்கினாள்

ii. ஒழுக்கம் விழுப்பம் தரும் என்பது வள்ளுவர் வாக்கு

(2 x 1 = 02 புள்ளிகள்)

சுட்டெண் :..................

**05)** **முதலில் தரப்பட்ட சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i. உண்மை :- வாய்மை, பொய், தவறு, பிழை

ii. சுத்தம் :- களங்கம், அச்சம், புனிதம், அசுத்தம்

iii. சூரியன் :- திங்கள், ஆதவன், மதி, உடு

(3 x 1 = 03 புள்ளிகள்)

**06)** **பின்வரும் செய்யுட்களில் விடுபட்ட அடிகளைப் பூர்த்தி செய்க.**

i. காலை மாலை எப்பொழுதும்
கடவுள் நினைவே கொண்டவராம்
வேலை இன்றிச் சிறு பொழுதும்

..........................................................................................

ii. தினைத்துணை நன்றி செயினும்

............................................................................................... பயன்றெரிவார்.

(2 x 1 = 02 புள்ளிகள்)

**07)** **ஒவ்வொரு உருவிற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

i. 

..........................................................

ii. 

..........................................................

(2 x 1= 02 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

**08.** **தரப்பட்ட வாக்கியத்தை ஆங்கிலத்தில் எழுதுக.**

உமது பெயர் என்ன?

..........................................................................................................................................

(01 புள்ளி)

**09.** **பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் தருக.**

i. Please come in :-..........................................................................................

ii. Sit down :-..........................................................................................

(2 x 1 = 02 புள்ளிகள்)

**10.** **சிங்களத்தில் கூறப்படும் வாக்கியத்தின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

ம(G)கே (G)கெ(Dh)தர லி (ப்)பினய

..........................................................................................................................................

(01 புள்ளி)

**11. பின்வரும் சொற்றொடர் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.**

புகையிரத நிலையம் :-..............................................................................

(01 புள்ளி)

**12. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

i. அருகில் / பெரியவர் / சீடன் / சென்றான்.

..........................................................................................................................

ii. கடிப்பது / பழக்கமாகும் / தவறான / நகம்

..........................................................................................................................

(2 x 1 = 02 புள்ளிகள்)

**13. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து எழுதுக.**

i. எல்லாச் செல்வங்களையும் விட கல்விச் செல்வமே ..............................................................
(உயர்ந்தது / உயர்ந்தன)

ii. கண்ணனோடு அவனது தம்பியும் ..............................................................
(சென்றனர் / சென்றான்)

iii. பறவைகள் வானத்திற் ..............................................................
(பறந்தது / பறந்தன) (3 x1 = 03 புள்ளிகள்)

**14) சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக.**

i. 1) மாநிலம் 2) மானிலம் 3) மாணிலம்

ii. 1) இராட்சியம் 2) இராச்சியம் 3) இராய்ச்சியம்

(2 x 1 = 02 புள்ளிகள்)

**15) பின்வரும் மரபுத் தொடர்களுக்குரிய கருத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

i. அள்ளிக்குவித்தல் : ..............................................................................

ii. அறைகூவுதல் : .............................................................................. (2 x 1 = 2 புள்ளிகள்)

**16) வகுப்பறையில் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல பழக்கவழக்கங்கள் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இருத்தல் வேண்டும்)**

i. ..........................................................................................................................

..........................................................................................................................

ii. ..........................................................................................................................

..........................................................................................................................

iii. ..........................................................................................................................

..........................................................................................................................

( 3 x 2 = 6 புள்ளிகள்)

❖ **தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.**


17) 5 7 8 9 எனும் எண்ணில்

i. பத்தாம் இடத்தில் காணப்படும் இலக்கம் எது? ..................................

ii. இலக்கம் 7 இன் பெறுமானம் யாது? .....................................................

18) i. XIV இதனை இந்து அராபிய எண்ணில் எழுதுக. .........................................................................

ii. நிறந் தீட்டப்பட்ட பகுதியை தசம எண்ணில் எழுதுக.



........................

19) i. 9006 இலிருந்து 410 ஐக் கழிக்குக. .................................

ii. 9888 உடன் 12 ஐக் கூட்டுக. ................................

20) தரப்பட்டுள்ள எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i. 48, 40, 32, 24, ............

ii. 10, 20. 40, 80, ............

21) பன்னிரண்டாயிரத்து எழுபது என்பதை இலக்கத்தில் எழுதுக. .................................

22) கழிக்குக. $\frac{3}{8} - \frac{1}{8} =$ ..........

23) சாந்தியின் வீட்டிலிருந்து பாடசாலை 4k 100 தூரத்தில் உள்ளது. அவள் அத் தூரத்தில் 900 ஐ நடந்தும் மீதி தூரத்தை புகைவண்டியிலும் செல்வாள் எனின், அவள் புகைவண்டியில் செல்லும் தூரம் யாது?

......................k ................


24) பிஸ்கட் பக்கற் ஒன்றின் நிறை 475 கிராம் ஆகும். அவ்வாறான 9 பொதிகளின் நிறை யாது?

....................kg............... g

25) ஒரு பெட்டியில் 25 மாபிள்களும் இன்னொரு பெட்டியில் 13 மாபிள்களும் உள்ளன. இரு பெட்டிகளிலும் சமனாக மாபிள்கள் இருக்கவேண்டுமாயின் கூடுதலாக உள்ள பெட்டியில் இருந்து குறைவாக உள்ள பெட்டிக்குள் எத்தனை மாபிள்களை இடவேண்டும்?

................................

26) **புத்தக வியாபாரி ஒருவர் 5 நாட்களில் விற்ற புத்தகங்களின் எண்ணிக்கையை கீழே உள்ள வரைபு காட்டுகின்றது. அதனை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.**




i. ஐந்து நாட்களிலும் விற்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

..................................................

ii. சமனான அளவு புத்தகங்கள் விற்கப்பட்ட நாட்கள் எவை?


..................................................

27) 50g தேயிலையின் விலை ரூ 40.00 எனின், 250g தேயிலையின் விலை யாது?

.......................... ரூபா................ .சதம்

28) தேனுஜா ஒரு பூங்கொத்தில் 4 பூக்கள் வீதம் 16 பூங்கொத்துக்கள் செய்து 2 பூக்களை மீதியாக வைத்திருந்தாள் எனின், ஆரம்பத்தில் தேனுஜா வைத்திருந்த பூக்களின் தொகை யாது?

..............................................

29)  இவ்வெட்டுருவை மடித்து ஒட்டும் போது பெறப்படும் திண்ம உரு யாது?

..................................................

30) 400 இனிப்புகளில் 40 ஐ மீதப்படுத்திய பின் ஏனையவற்றை ஒரு பைக்கற்றில் 5 வீதம் இருக்குமாறு சிறிய பைக்கற்றுக்களாக பொதி செய்யப்பட்டன.

i. சிறிய பைக்கற்றுக்களில் பொதி செய்யப்பட்ட இனிப்புக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..............................................

ii. அத்தகைய எத்தனை சிறிய இனிப்புப் பைக்கற்றுக்கள் செய்யப்பட்டன?

..............................................

31) பிற்பகல் 1.45க்கு வீட்டில் இருந்து புறப்பட்ட உமா 55 நிமிடங்களில் தபாலகம் சென்றாள். அவள் தபாலகம் அடைந்த நேரத்தை நியம நேரமாக எழுதுக.

.......................................................... (15 x2 = 30 புள்ளிகள்)

❖ **32 தொடக்கம் 61 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

32) "எனது மனதில் தோன்றிய ஆர்வம் எனது நண்பர்கள் மனதிலும் தோன்றட்டும்." இவ் வெண்ணம் தோன்றுவது தியானச் செயற்பாட்டின்

1. முதலாம் படிமுறை
2. 2ம் படிமுறை
3. மூன்றாம் படிமுறை
4. 4ம் படிமுறை

33) வாலிலுள்ள கொடுக்கினால் எதிரியைத் தாக்கும் பிராணி

1. குளவி
2. தேள்
3. எறும்பு
4. தேனீ

34) களனி கங்கை கடலுடன் கலப்பது

1. களுத்துறையில்
2. அம்பாந்தோட்டையில்
3. கொழும்பில்
4. திருகோணமலையில்

35) அஞ்சல் அலுவலகத்தில் தலைமைப் பொறுப்பை வகிப்பவர்

1. தபால் ஊழியர்
2. அஞ்சல் அதிபர்
3. தபாற்காரன்
4. முத்திரை விற்பவர்

36) தேசிய இலச்சினையில் தன்னிறைவைக் குறிப்பது

1. தர்மச்சக்கரம்
2. நெற்கதிர்
3. நிறைகலசம்
4. சிங்கம்

37) இலங்கையில் முதன் முதலாக கட்டப்பட்ட குளத்தையும் அக்குளத்தை அமைத்த மன்னனையும் காட்டும் விடை

1. கலாவாவி - தாதுசேனன்
2. அபயவாவி - பண்டுகாபயன்
3. மின்னேரியா - மகாசேனன்
4. பராக்கிரம சமுத்திரம் - பராக்கிரமபாகு

38) மட்பாண்டக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் உபகரணம்

1. வனைசில்லு
2. பட்டடை
3. செக்கு
4. நுகத்தடி

39) வேம்பு பூக்கும் மாதம்

1. வைகாசி
2. ஆனி
3. சித்திரை
4. பங்குனி

40) வித்துக்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் ஆக்கம்

1. அல்பனா
2. ஸ்ரென்சில்
3. ஓரிகாமி
4. கொலாஜ்

41) தாவர இலை மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம்

1. வற்றாளை
2. கறிவேப்பிலை
3. சதைகரைச்சான்
4. அகத்தி

42) வெள்ளை நிறத்தில் முட்டையிடாத பிராணி

1. பல்லி
2. கிளி
3. நத்தை
4. ஓணான்

43) பச்சை நிறத்தைப் பெற கலக்க வேண்டிய வர்ணங்கள்

1. சிவப்பு, நீலம்
2. சிவப்பு, மஞ்சள்
3. நீலம், மஞ்சள்
4. சிவப்பு, கறுப்பு

44) கைக்குட்டையின் ஓரத்தைத் தைக்கப் பயன்படுவது

1. சங்கிலித் தையல்
2. கம்பளித்தையல்
3. சிறுநூலோடி
4. பெருநூலோடி

45) வற்றாளைக்கிழங்கில் காணப்படுவது

1. புரதம்
2. விற்றமின்கள்
3. மாப்பொருள்
4. கொழுப்பு

46) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழைப் பெறச் செல்ல வேண்டிய இடம்

1. கிராம அலுவலர் காரியாலயம்
2. சுகாதாரத் திணைக்களம்
3. பொலிஸ் நிலையம்
4. ஆட்பதிவுத் திணக்களம்

47) வண்ணத்துப்பூச்சி முட்டையிடுவது

1. இலைகளின் மேற்புறத்தில்
2. இலைகளின் கீழ்ப்புறத்தில்
3. பூவில்
4. நீரில்

48) மயக்கம் ஏற்பட்ட ஒருவருக்குச் செய்யக் கூடாதது

1. இறுக்கமான ஆடைகளைத் தளர்த்தி விடல்
2. நன்கு சுவாசிப்பதற்கு ஏற்ற சூழலை உருவாக்கல்
3. பருகுவதற்குப் பானம் கொடுத்தல்
4. வைத்தியரிடம் அழைத்துச் செல்லல்.

49) சீனி விரைவாகக் கரைவது

1. தண்ணீரில்
2. கொதித்தாறிய நீரில்
3. குளிர் நீரில்
4. வெந்நீரில்

The National e-learning Portal for The General Education

50) பயிர்களைச் சேதப்படுத்தும் நத்தைகளை உணவாக உட்கொள்வது

1. ஓணான் 2. தும்பி 3. தவளை 4. செண்பகம்

51) தண்டுகளை நட்டு கன்று பெறக்கூடிய தாவரம் அல்லாதது

1. முருங்கை 2. மரவள்ளி 3. மா 4. கங்குன்

52) புவிக்கு அண்மையிலுள்ள கோள்

1. வியாழன் 2. சனி 3. வெள்ளி 4. புதன்

53) சக்தி குறைவாக விரயமாகும் விளையாட்டு

1. கயிறிழுத்தல் 2. பாரந்தூக்குதல் 3. தாயம் 4. ஓடுதல்

54) காற்று வீசும் திசையை அறிய உதவுவது

1. காற்றுத் திசைகாட்டி 2. திசையறிகருவி
3. காற்று வேகமானி 4. மழைமானி

55) மஞ்சாடி வித்தின் நிறம்

1. மஞ்சள் 2. சிவப்பு 3. வெள்ளை 4. கறுப்பு

56) பண்டைய காலத்தில் செக்கு ஆட்டி எண்ணெய் பெறப் பயன்பட்ட விலங்கு

1. ஆடு 2. கழுதை 3. எருது 4. யானை

57) கம்மாலையில் நெருப்பு எரியக் காற்றை வழங்கும் உபகரணம்

1. அரம் 2. துருத்தி 3. தீதாள் 4. அச்சாணி

58) கையில் ஒட்டிய பலாக்காய்ப்பாலை எளிதாக அகற்றப் பயன்படும் பொருள்

1. தண்ணீர் 2. சவர்க்காரம் 3. தேங்காய் எண்ணெய் 4. ஓடிகொலோன்

59) 

அருகிலுள்ள வீதிக் குறியீடு குறித்து நிற்பது

1. பாதுகாப்பான புகையிரதக் கடவை.
2. பாதுகாப்பான புகையிரதக் கடவை முன்னால்
3. பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை
4. பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை முன்னால்

60) சந்தையில் பொருட்களை வாங்கும் போது முக்கியமாகக் கவனிக்க வேண்டியது

1. பொருளின் விலை 2. சுவை 3. காலாவதித் திகதி 4. தரம்

61) இலங்கை குடியரசான ஆண்டு

1. 1948 2. 1972 3. 1947 4. 1960

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
# பயிற்சிப் பரீட்சை 03 இன் விடைகள்

**தரம் - 05** **3** **வினாத்தாள் - II**

01. 1) ஏரிக்கரையில் இருந்த புதர்களில் / புதர்களில் 2) அடர்ந்த / அழகான 3) ஏரி
    4) காடு 5) ஏரிக்கரை
    6) வாத்து / காடு / வாய்க்காலில் / ஏரிக்கரை / ஏரி
02. 1) இரட்டைக்கிளவி 2) வெள்ளிவிழா 3) உலோபங் கூடாது.
03. 1) சகபாடி 2) பொதுநலவாதி
04. 1) கவிதா சந்தையில் மாம்பழம், வாழைப்பழம், தோடம்பழம் ஆகியன வாங்கினாள்.
    2) "ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்பது வள்ளுவர் வாக்கு.
05. 1) வாய்மை 2) புனிதம் 3) ஆதவன்
06. 1) வீணாய்ப் போக்க மாட்டாராம் 2) பனைத் துணையாக் கொள்வர்
07. 1) Black Board 2) Radio
08. 1) what's your name? / What is your name?
09. 1) தயவுசெய்து உள்ளே வரவும் / வாருங்கள் 2) உட்காருங்கள் / இருங்கள்
10. 1) எனது வீட்டு முகவரி
11. 1) தும்ரிய ஸ்தானய
12. 1) பெரியவர் அருகில் சீடன் சென்றான் அல்லது சீடன் பெரியவர் அருகில் சென்றான்.
    2) நகம் கடிப்பது தவறான பழக்கமாகும்.
13. 1) உயர்ந்தது 2) சென்றான் 3) பறந்தன
14. 1) மாநிலம் 2) இராச்சியம்
15. 1) நிறையச் சம்பாதித்தல் 2) போருக்கு அழைத்தல்
16. பொருத்தமான வாக்கியங்கள்
17. 1) 8 2) 700
18. 1) 14 2. 0.5
19. 1) 8596 2) 9900
20. 1) 16 2) 160
21. 12070
22. $\frac{2}{8}$ அல்லது $\frac{1}{4}$
23. 3km 200m
24. 4kg 275g
25. 6
26. 1. 115
    2. திங்கள், புதன்
27. 200 ரூபா
28. 66
29. கனவுரு
30. 1. 360
    2. 72
31. 14 : 40 மணித்தியாலங்கள் / 14 : 40 h

| | | | |
|---|---|---|---|
| 32. 4 | 41. 3 | 51. 3 | 61. 2 |
| 33. 2 | 42. 3 | 52. 3 | |
| 34. 3 | 43. 3 | 53. 3 | |
| 35. 2 | 44. 2 | 54. 1 | |
| 36. 2 | 45. 3 | 55. 2 | |
| 37. 2 | 46. 1 | 56. 3 | |
| 38. 1 | 47. 2 | 57. 2 | |
| 39. 3 | 48. 3 | 58. 3 | |
| 40. 1 | 49. 4 | 59. 1 | |
| | 50. 4 | 60. 3 | |

The National e-learning Portal for The General Education